
மட்டக்களப்பு சூழல் விழிப்புணர்வு மாசிகை.

# சூழல் சுடர்

மாசி - 1994 ★ "மன்று", 16, புனித மிக்கேல் வீதி, மட்டக்களப்பு. ★ 14



மட்டக்களப்பு மாவட்டச் சூழல் மகத்துவம் விளக்கப்படவும், சூழலிலுண்டாகும் தாக்கங்களை வெளிக்கொணரவும் "சூழல் விழிப்புணர்ச்சி மன்றம்" இவ்விதழை மாதம் ஒருமுறை விரிக்கிறது.

★

**மனிதரை அழகுபடுத்துவது**
**ஆடையணிகளல்ல**
**நற்நடத்தையே!**
**அதேபோல்,**
**பூமியை அழகுபடுத்துவது**
**நவீன வசதிகளல்ல**
**இயற்கையின் செழிப்புகளே!**

★

# பணம் குப்பையிலே

— யோ. இ. கிறிஸ்ரோபர் —

குப்பை என்றாலே எல்லோரும் அசுத்தமானது, நாற்றம் எடுக்கும் என்றெல்லாம் கூறுவார்கள். குப்பைக்கிடங்கைக் கண்டதும் அகன்று நடப்பர் நகரங்களிலே குப்பை கூழங்கள் ஓரிடப்படுத்துதல் ஓர் முக்கிய வேலையாகத் தினம் செய்யப்படுகின்றது. வீட்டைக் கூட்டினால் என்ன, முற்றத்தைப் பெருக்கினால் என்ன, குப்பைகள் வெளியே, தூர வீசப்படவேண்டுமென்ற கொள்கையுடையவர்களே எம் மக்கள். ஆனால், வீட்டில் உள்ள தாவரங்களுக்கு உணவிடுவதற்குப் பணம் கொடுத்து செயற்கை உரத்தை வேண்டுவர்.

குப்பைக்கிடங்கு ஓர் பணப்புதையல் என்று கூறினால், மடையன் என்பார்கள். ஆனால், இவ் உண்மையை எடுத்துக் கூறவேண்டுமென்றே கல்லடியில் சேர்த்த குப்பையைச் சிவானந்தா வித்தியாலய சூழல் அணியினரின் உதவியுடன் அதிசிறந்த தாவர உரமாக மாற்றியுள்ளோம். இதனைத் தயாரிக்கும் பொழுது எமக்குச் சிறு தொல்லைகள் இருந்தன. இக்குப்பையை உக்குவதற்குக் கொட்டியிருக்கும் பொழுது யாரோ நல்லவர்கள் தீ வைத்தெரித்தனர். மாநகரசபை ஆணையாளருக்கு முறைப்பாடு கொடுத்தனர். ஆனாலும், எமது முயற்சி வெற்றி கண்டது மட்டுமல்லாமல் கொழும்பில் நடந்த பொருட்காட்சியில் காட்சிக்கூடம் அமைத்தவர்களுக்குப் பரிசு பெற்றுக்கொடுப்பதற்கு ஓர் காரணமாக இருந்தது.

குப்பை கூழங்கள் உக்குவதற்கு நுண்ணங்கிகளுடன் மண்புழுவும் ஓர் முக்கிய காரணியாகும். இம் மண்புழுவினால் சிதைவடைந்த கழிவு, நிறைந்த தாவர போஷாக்கைக் கொண்டுள்ளதாகப் பங்ளூர் விவசாய விஞ்ஞானப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உயிரியல் ஆராய்ச்சியாளர் கூறுகின்றார். இக்கூட்டுப் பசளையில் 5 மடங்கு கூடிய நைதரசனும், 7 மடங்கு கூடிய பொசுபேற்றும், 11 மடங்கு கூடிய பொட்டாசும் இருப்பது காணக்கூடியதாக இருந்தது என்று கூறியுள்ளார். செயற்கை உரத்திற்கு மாற்றுப் பொருளாகப் பாவிப்பதற்குச் சிறந்தது மட்டுமல்லாமல் இயற்கைச் சுற்றாடலுடன் இணைந்துள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இயற்கை உர உற்பத்தியில் பலர் ஈடுபட்டுள்ளபோதிலும் விவசாயிகளின் தேவை அதிகமாக உள்ளது. தஞ்சாவூர் மாநகர கூட்டுஸ்தாபனம் 1992 - 93ம் ஆண்டில் 11,790 தொன் இயற்கை உரத்தை ரூபா 3.28 லட்சத்திற்கு விற்றுள்ளார்கள். தமிழ்நாட்டிலும், கர்நாடக மாவட்டத்திலும் மண்புழுக்களை விவசாயிகள் விலை கொடுத்து வேண்டுகின்றனர். 1,000 மண்புழுக்களின் விலை ரூபா 500/-. மட்டக்களப்பு மாவட்டத்தில் சேரும் குப்பைகளைக் கொட்டுவதற்குத் தகுந்த இடம் தேடி அலைவதிலும் பார்க்க அவைகளை உரமாக மாற்றி விற்பதன்மூலம் அந்தந்த நகரசபைகள் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அப்பணத்தைப் பாவிக்கமுடியும். நாமும் செய்தால் என்ன? ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ கட்டுரைச் சுடர் ★

# விதியா? இல்லை சதியா?

திருமதி விஜயா இராமச்சந்திரா (ஆசிரியை), குறுமண்வெளி சிவசக்தி வித்தியாலயம்.

எரியும் வயிற்றின் பசியைப் போக்கவும், எரியாத அடுப்பில் உலை ஏற்றவும், கவலை தோய்ந்த தன் மனைவியின் முகத்தில் விழித்துக்கொண்டு குழந்தைகள் குரல் கொடுக்கும் முன்னரே காடு நோக்கிப் புறப்பட்டான் காளை ஒருத்தன். கிழக்கு வெளுத்தது, கீழ்வானம் சிவந்தது, கையிலிருந்த கத்தி பளிச்சென மின்னியது, துருப்பிடித்த சைக்கிளின் கிறீச், கிறீச் ஒலி உறங்கிக்கொண்டிருந்த தெரு நாய்களின் நித்திரையைக் குலைத்துவிட்டது. உழைத்து, உழைத்து உரமேறிய கால்களால் ஊன்றி மிதித்தவண்ணம் காவற்படையினர் கண்விழிக்கு முன்னர் தன் தொழிலுக்கு ஆயத்தமானான். ஈராறு குழந்தைகளின் பசிப்பிணியைப் போக்கி ஒரு வேளை வயிறார உண்டு மகிழ வேண்டுமெனில் அவன் கைகள் சலிப்பின்றித் தறித்துத்தான் ஆகவேண்டும். என் செய்வது விதியை நொந்துதான் பயன் என்ன என்று அலுத்துக்கொண்டே கத்தியை ஓங்கினான்.

என்ன அதிசயம்! ஓங்கிய கத்தி ஒரு கணம் திகைத்து நின்றது. கையிலிருந்த மரத்துடன் நிமிர்ந்து நின்ற மரம் உரத்துக் கதைக்கத்தொடங்கியது.

என்ன நண்பரே! நேற்று என்னருகில் நிமிர்ந்து நின்ற நீ, இன்று என்னை அழிக்க வந்துவிட்டாயா? ஓகோ! குலத்துக்கீனம் கோடரிக் காம்பல்லவோ! உன்னைச் சொல்லிக் குற்றமில்லை, என் தலைவிதி. மரணதண்டனை விதிக்கப்பட்ட நான் உன் எசமானுடன் என் இறுதி ஆசைகளைக் கூறத் துடிக்கின்றேன் என்று பெருமூச்செறிந்து தொண்டை கரகரக்கத் தன் கதையைக் கூறத்தொடங்கியது.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலே முன்தோன்றிய இலைக்சண் போன்ற பாசித்தாவரங்களின் வழித்தோன்றல்களே நாங்கள். எத்தனையோ மில்லியன் ஆண்டுகளுக்கு முன்தோன்றிப் பலனை எதிர்பாராது கடமைபுரியும் எங்களின் சேவைகளைப்பற்றி ஒருசில வார்த்தைகள் கூறுகிறேன் கேள்.

உண்ண உணவைத் தருகின்றோம், உறங்கிக் களைப்பாற நிழலைத் தருகின்றோம், வண்ண வண்ண மலர்களைத் தந்து உங்களை மகிழ்விக்கின்றோம். அரிய பல மருந்து மூலிகைகளால் உங்களின் நோய்ப்பிணிகளைப் போக்கிச் சுகமாக வாழ வழி காட்டுகின்றோம். இன்னும் எத்தனை எத்தனையோ சேவைகளைச் செய்தும் உங்களுக்குப் போதுமென்கின்ற மனமே கிடையாதா? மேலும் மேலும் ஏன் எங்களை வதைக்கிறீர்கள்? புல்லாகிப் பூண்டாகிப் பல்மரங்களாகி, விருட்சங்களாகிப் பல நூற்றாண்டு காலம் வாழ்ந்திடும் மரமென்றால் எத்தனை பயன் கிடைத்திருக்கும். பூண்டுகளாயிருக்கும்பொழுது மண்ணில் படர்ந்து, காற்றின் வேகத்தைத் தடுத்து, ஓடும் நீரின் அரிப்பிலிருந்து மண்ணைப் பாதுகாத்து உங்களுக்கு உதவினோம் அல்லவா? அதெங்கே உமக்கு விளங்கப்போகிறது?

ஆதிகால மக்கள் காடுகளே தஞ்சம் என்று இலை குழைகளை உடுத்து, காய்கனிகளை உண்டு, மரங்களின் கீழ் உறங்கி மகிழ்ந்திருந்தனர். எங்களின் பற்றைகளின் கீழ் வாழ்ந்த அக்காட்டுவாசிகள் குள்ள மனிதர்களாகவே தோன்றினார்கள். வனவிலங்குகளுடன் சேர்ந்து வாழ்க்கை நடாத்திய இவ்வாசிகள் விவசாயத்தில் ஈடுபட்டு எம்மில் புது வகையான இனங்களை உற்பத்தி செய்யத் தொடங்கினர்.

உணவுக்காக வாழ்ந்த மனிதர் படிப்படியாக நாகரீகம் வளர வளர எங்களின் ஓலைகள், பட்டைகளைக் கொண்டு ஒருவித பாவாடைகளை அணிந்தனர். பின்னர் ஒருபடி உயர்ந்து குடிசைகளை வீடுகளாகவும் மாற்றிவிட்டனர். அப்போதிலிருந்து தான் எங்களுக்கு அழிவுக்காலம் தொடங்கியது.

வீட்டுத் தேவைகளுக்காகவும் வேறு பல தேவைகளுக்காகவும் என் வைரமான சகோதரர்கள் பலர் வெட்டி வீழ்த்தப்பட்டனர். முதிரை, தேக்கு, பாலை எனப் பரந்து நின்ற என் உடன்பிறப்புக்கள் இன்று அருகிவிட்டனர். எதிர்காலத்தில் இப்படியும் ஒரு மரம் இருந்ததா? என்று உன் குழந்தைகள் கேட்கத்தான் போகிறார்கள். ஏன் இலங்கையின் தேசிய மரமாம் நாக மரத்தைக்கூட உமக்குத் தெரிந்திருக்காதே!

நில்... நில் இன்னும் கொஞ்சம் சொல்கிறேன். என் பயன்கள் எல்லாவற்றையும் சொன்னால் உன்னால் சகிக்கமுடியாது. நீ புகைத்துக்கொண்டிருக்கிறாயே அந்தப் புகையிலைகூட என் இனமே! அதுமட்டுமா நீர் அணிந்திருக்கும் சேட்டும், சாரமும்கூட எங்களுக்கே சொந்தம்.

என்ன! வியப்பாக இருக்கின்றதா? இதையும் சற்றுச் செவிமடுத்துப்பார். என் சகோதரி பருத்தியிலிருந்து பஞ்சாகி, நூலாகி நெசவு ஆலைகளின்

(6ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ கவிதைச் சுடர் ★

## இன்பமுடன் வாழ்வதற்கு...

இன்பமுடன் வாழ்ந்த நான்
இன்று துன்பத்தில் துவளுகின்றேன்
இதை உணர்ந்ததால் கூறுகின்றேன்
கொஞ்சம் செவி மடுப்பாய் சகோதரமே!
காலங்கள் கடந்தோடின
தற்காலம் விரைந்து வந்தது
நானும்தான் விந்தையிலே
பணத்தைப்பெற முயன்று நின்றேன்.
கொண்ட சிந்தை நிறைவேற்ற
கையினிலே கத்தியுடன்
மரங்களையெல்லாம் தறித்துவிட்டேன்
வேர்களையும் பிடுங்கிவிட்டேன்.
இப்பொழுது மரமுமில்லை...
ஆறுதற்கு நிழலுமில்லை...
பாலைவனம் ஆக்கிவிட்டு
பதறுகின்றேன் சகோதரமே
அதுமட்டுமா என் கொடிய செயல்?
குவித்துவிட்டேன் குப்பைகளை
தட்டிவிட்டேன் தீப்பெட்டியை
கெட்டவாயு புகுந்ததுவே
அதை ஈடு செய்ய மரமுமில்லை
வரட்சியோ வரட்சியம்மா
நோய்களும்தான் பெருகுதம்மா
உணர்ந்துவிட்டேன் சகோதரமே!
அதனாலே கூறுகின்றேன்
என்னைப்போல் செய்திடாமல்
நல்லது செய்ய முனைந்துவிடு.
அப்பொழுது புலருமையா
புது உலகம் பிறக்குமையா
இவ்வறிவுரைகள் கூறுகின்றேன்
நீ இன்பமுடன் வாழ்வதற்கு.

ஆக்கம்: கு. வெற்றிவடிவேல்,
மன்று.

## யாருக்கு முதலிடமோ...?

உலகத்திலே முக்கியமானவன் நான்தான் – இதோ
பூமியை நோக்கி மிக விரைவாக இறங்குகின்றேன்
எனைத் தடுக்க யார் இருக்கின்றார்கள்?
எங்கும் பாலைவனம்... மரமே இல்லை...
பார்த்தீர்களா மனிதர்களை
என்னைக்கண்டு ஓடுகின்றார்கள்
உலகை விழுங்க வெகுநாள் செல்லாது
மிக விரைவில் அழித்திடுவேன் பூமியை எரித்திடுவேன்.

ஓகோ! அப்படியா விசயம் – நான்
எதற்கு இருக்கின்றேன்...?
ஓசோன் படலத்தைக்கூட ஓட்டையாக்கிவிட்டேன்
இந்நிலையில் சூரியனுக்கா முதலிடம்...?
முடியுமே முடியாது.
விரும்பி எரித்தனர் மனிதர் குப்பையை
அதனால்,
காபனீரொட்சைட்டு நான் பூமியை அழித்திடுவேன்.

சிரிப்பல்லவோ... சிரிப்பல்லவோ – இங்கு
புகை நான் இருக்கும்போது
மடையர்கள் இவர்களெங்கே...?
அடடா! உலகெங்கும் என்னை
நாளும் கடத்துகின்றார்கள்.
என்னைக் கண்ட மக்களோ
மூக்குகளைப் பொத்துகின்றார்கள்
இந்நிலையில் நானேதான் உலகை அழித்திடுவேன்.

ஆக்கம்: என். புவனேந்திரன்,
கல்லடி.

## அன்னை பூமியைக் காப்போம்

எம்மை வாழவைப்பது அன்னை பூமி
அதைப் பாதுகாப்பது எம் கடமை
ஆனால் நாம் செய்வதோ கொடுமை
இன்று பூமித்தாயின் மேலாடை கிழிந்தது
அந்தோ! அதனாலே அமிலமழை
அதுமட்டுமா? பெற்றவள்விடும் கண்ணீர்
இன்று பெருக்கெடுத்தோடுது வெள்ளம்
இயற்கையின் சமநிலையைக் கெடுத்ததால்
இன்று வெடித்தன மலைகளும் எளிதாக
அன்னை பூமியைக் காத்திட நினைத்திட்டால்
போதுமே நன்மையாகுமே.

ஆக்கம்: திருமதி தே. தயாபரன்,
மாமாங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பாடம்

## தாவரங்களின் பயன்கள்

திருமதி சாந்தி கெங்காதரன், தடாகம், சந்திவெளி.

### கறிவேப்பிலை

பசியைத் தூண்டி உண்ணும் ஆவலையும் வளர்த்து விட்டமின் மற்றும் உலோக உப்புக்களையும் நமக்களித்து செரிப்பதற்குத் துணைபுரியும் ஆற்றலுடையதே கறிவேப்பிலை.

**இதன் பயன்கள்:**

**இலை**

இதன் பயன் அனைவரும் அறிந்ததே. சாம்பார், ரசம், கறிவகைகள், மோர் எனப் பல உணவுப் பொருட்களில் மணமூட்டுவதற்காகச் சேர்க்கப் படுகின்றது. மணம் தவிர இலையில் விட்டமின்கள் ஓரளவு உண்டு.

**கனி**

கனியை உண்ணலாம். மற்றும் மஞ்சள்நிற உலர் எண்ணெய் 76% அளவில் பிரித்தெடுக்கலாம். இவ் எண்ணெய் ஒருவித மணமும், கிராம்பைப்போன்ற சுவையும் கொண்டது. நாக்கில் படும் போது குளிர்ச்சியாயிருக்கும்.

**மரம்**

கறிவேப்பிலை மரம் சாம்பல் வெள்ளை நிறமுடையது. நெருங்கிய ரேகைகள் உடையது. கடினமானது. இத்தடியில் இருந்து வேளாண்மைக் கருவிகள் செய்யலாம்.

**மருத்துவ பயன்கள்:**

**இலை**

இலையை நிழலில் உலர்த்தி இதனுடன் மிளகு, சீரகம், உப்பு, சுக்கு ஆகியவற்றைச் சேர்த்துப் பொரித்து நெய்யுடன் சோற்றில் கலந்து உண்ணலாம். அதனால், மந்தம், மந்தபேதி, மலதோடம், மலக்கட்டு ஆகியவற்றைச் சாந்தப்படுத்தும்.

இலையுடன் பிற மருந்துச் சரக்குகளைச் சேர்த்து துவையல் செய்து ஆகாரத்துடன் உண்ண பித்த வாந்தி, பித்தஷயம், வயிற்றுளைச்சல் என்பன குணமடையும்.

இலையுடன் அரிசி மற்றும் சில மருந்துச் சரக்குகளையும் சேர்த்துத் தயாரிக்கும் மருந்து, அசீரண பேதியைக் குணப்படுத்தும்.

குழந்தையை நீராட்டியபின் இலை, மிளகு ஆகியவற்றை நெய்யில் வறுத்து வெந்நீர் விட்டு அரைத்துக் கரைத்துக்கொடுத்தால் மந்தம் நீங்கிடும், பசி ஏற்படும்.

**இலை ஈர்க்கு**

ஈர்க்கிற்கு வாந்தியை நிறுத்தும் பண்பு உள்ளது.

**பட்டை, வேர்**

இவற்றிற்கு வெப்பமுண்டாக்கிப் பண்பு உள்ளது. நச்சுப் பிராணிகள் கடிக்கும், சிராய்ப்பிற்கும் இவற்றை அரைத்துப் பூசலாம்.

### ஆமணக்கு

**இலை**

- ★ இலையை வதக்கி முலைமீது கட்டினால் பால் சுரக்கும்.
- ★ இலைக்கஷாயம் வெப்பகற்றியாகச் செயற்படும்.
- ★ கஷாயத்தைக் கொப்பளித்தால் பற்களில் ஈறு வலுப்படும்.
- ★ நாட்பட்ட புண், கொப்புளம் ஆகியவற்றின்மேல் இலையை அரைத்துக் கட்டினால் பழுத்து உடையும்.
- ★ இலைச் சாற்றிற்குக் குருதிப் போக்கடக்கிப் பண்பு உள்ளது.
- ★ இலைச்சாம்பல் கினிப் புழுவை எடுக்க உதவிடும்.
- ★ மூல உபத்திரவத்திற்கு வெளிப் பூச்சாக இலையின் சாற்றைப் பூசலாம்.
- ★ இலை மற்றும் வேர்க்கஷாயம் வயிற்றோட்டத்தைக் கட்டுப்படுத்தும்.

**காட்டாமணக்கு - ஜட்ரோபா குர்காஸ் (Jatropha Curcasl)**

- ★ இப்பாலை வலியுள்ள இடத்தில் வைத்தால் பல்வலி குணமாகும்.
- ★ காயம் ஏற்பட்டு இரத்தம் வெளிவரும் இடத்தில் பூசினால் இரத்த ஒழுக்கு நிற்கும். கொல்லோடின் (Collodin) போன்று தோன்றும்.
- ★ வெள்ளை, வயிற்றுவலி, குறிப்புண், கட்டி ஆகியவற்றைக் குணப்படுத்தும்.
- ★ சரும நோய்கள், படர் தாமரை ஆகியவற்றையும் குணப்படுத்தும்.

(7ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுச் சுடர்

பாடசாலை மாணவருக்கான

## கவிதை, கட்டுரைப் போட்டிகள் - 1994

ஏப்ரல் 22ம் திகதி மண் காப்புத்தினத் (பூமிதினம்) தை முன்னிட்டு
"மன்று"
கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்

**பாடசாலை மாணவரிடையே நடாத்தும் போட்டி நிகழ்ச்சிகள்**

1. பங்குபற்றுவோர் : 9 — 11ம் ஆண்டு மாணவர்கள்.
   12 — 13ம் ஆண்டு மாணவர்கள்.

2. தொனிப்பொருள் : மண் பாதுகாப்பு என்பதே தொனிப்பொருளாக அமையவேண்டும். சுற்றாடல் மாசுபடல், சுற்றாடல் பாதுகாப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்கள் மட்டுமே ஆக்கங்களில் பிரதிபலிக்கவேண்டும்.

3. நோக்கம் : 1. எமது சுற்றாடல் அம்சங்களில் ஒன்றான நிலம் பாதுகாக்கப்படவேண்டுமென்ற எண்ணக்கருத்தை மாணவரிடையே பதியவைத்தல்.
   2. இயற்கையை நேசிக்கவேண்டியதன் அவசியத்தைப் பரப்புதல்.
   3. சுற்றாடல் பாதுகாப்பு, வளங்கள் வீணாக்கப்படுதல் என்ற எண்ணக் கருத்துக்களையும், விழிப்புணர்வையும் மாணவரிடையே உருவாக்குதல்.

4. பொது நிபந்தனைகள்:

அ. தலைப்பு : ஆக்கங்களுக்குரிய தலைப்புகளைத் தொனிப்பொருளுக்கேற்ற வகையில் மாணவர்களே தேர்ந்தெடுக்கலாம்.

ஆ. ஆக்கங்கள் :

| 1. ஆண்டு | | கவிதை | | கட்டுரை |
|---|---|---|---|---|
| 9 – 11ம் | — | 100 – 125 சொற்கள் | — | 200 – 250 சொற்கள் |
| 12 – 13ம் | — | 150 – 200 சொற்கள் | — | 350 – 400 சொற்கள் |

2. மாணவரின் சொந்த ஆக்கங்களாக இருத்தல்வேண்டும். ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டவைகளோ, பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஏனைய வெளியீடுகளில் வெளிவந்தவைகள், தழுவல்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அவ்வாறானவை என நிரூபிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட பாடசாலைக்கும் மாணவருக்கும் எதிராகத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
3. நிபந்தனைக்குட்பட்ட ஆண், பெண் ஆகிய அனைவரும் போட்டியில் பங்குகொள்ளலாம்.
4. ஒரு மாணவர் எத்தனை ஆக்கங்களும் அனுப்பிவைக்கலாம். மாணவரின் சொந்தக் கையெழுத்தில், தெளிவான எழுத்தில் எழுதி அனுப்பிவைக்கவும். கோடிட்ட (புல்ஸ்கப்) காகிதத்தில் ஆக்கங்கள் எழுதப்படவேண்டும்.
5. ஆக்கங்களில் எழுதியவரின் பெயர், ஆண்டு என்பவற்றுடன் கையெழுத்தும் இடப்பட்டிருக்கவேண்டும். மாணவரின் சொந்த ஆக்கம் என்பது பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவேண்டும்.

இ. போட்டிகள் : போட்டிகள் 2 கட்டங்களாக நடாத்தப்படும். பிரதேசச் செயலக கோட்டக்கல்வி ரீதியில் 1வது கட்டப் போட்டியும், இறுதிப் போட்டியாக மாவட்ட மட்டப் போட்டியும் இடம்பெறும்.

ஈ. முடிவுத்திகதி: ஏப்ரல் 7ஆம் திகதிக்கு முன்னர் யாவும் அனுப்பிவைக்கப்படவேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்த ஆக்கமும் நிராகரிக்கப்படும்.

உ. அனுப்பவேண்டிய முகவரி:

இணைப்பாளர்,
மன்று,
16, புனித மிக்கேல் வீதி,
மட்டக்களப்பு.

ஆக்கங்களைத் தபால் மூலமோ நேரிலோ சமர்ப்பிக்கலாம். [7ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்புகள்

## எம் தொடர்புகளில் சில:

**கோறளைப்பற்று**

தடாகம், சந்திவெளி

**ஏறாவூர்ப்பற்று**

மட்/தன்னாமுனை புனித வளனார் வித்தி
மட்/செங்கலடி மகாவித்தியாலயம்
பொது ஜன அபிவிருத்தி மன்றம், சித்தாண்டி.

**மண்முனை வடக்கு**

மட்/நாவலடி நாமகள் வித்தியாலயம்
மட்/கல்லடி இக்னேசியஸ் வித்தியாலயம்
மட்/அரசடி மகாஜனக் கல்லூரி
மட்/இந்துக் கல்லூரி
இந்து இளைஞர் மன்றம், கூழாவடி
நாவலடி வீட்டுத் திட்டம்
சூழல் விழிப்புக் குழு, பாலமீன்மடு
கோல்ட்பிஸ் விளையாட்டுக் கழகம், நாவலடி.

**காத்தான்குடி**

மட்/காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயம்
மட்/காங்கேயனோடை அல் - அக்ஷா வித்தி.
மட்/காத்தான்குடி அல் - ஹிரா வித்தியாலயம்.

## முக்கிய அறிவித்தல்

மாணவர்களின் நலன் கருதி சுடரின் விலையினை அரைச் சந்தாவாக (2.50) ஆக்கியுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

## வெளியீட்டுக் குழு

**சுடரின் தூண்டுகோல்:**

மனோ. இராஜசிங்கம் } மன்று
யோ. இ. கிறிஸ்ரோபர் }

**நெறிப்படுத்துனர் குழு:**

அ. யோகராணி }
க. லீலா } மன்று
கு. வெற்றிவேல் }

**ஆசிரியர் குழு:**

த. மதிவண்ணன் – வந்தாறுமூலை கி. அ. ச,
பூ. சுந்தரலிங்கம் – பொதுஜன அ. ம.
வி. முரளீதரன் – செங்கலடி ம. வி.
லெ. முகம்மது அஸ்ரப் – அல்-ஹிரா வித்.

**மண்முனைப்பற்று**

மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலயம்
மட்/கிரான்குளம் விநாயகர் வித்தியாலயம்
மட்/தாளங்குடா ஸ்ரீ விநாயகர் வித்தியாலயம்

**மண்முனை தென் எருவில் பற்று**

மட்/களுதாவளை மகா வித்தியாலயம்
மட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்
மட்/குருமண்வெளி சிவசக்தி வித்தியாலயம்
கிராமோதய சபை, களுவாஞ்சிக்குடி

## விதியா? இல்லை சதியா?...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

சாதனையால் உன் கைத்தறிச் சாரம் கிடைத்தது. அடுத்து நீர் அணிந்திருக்கும் றேயன் சேட் ஒருவித மென் மரக்கூழில் இருந்துதான் உற்பத்தி செய்யப் படுகிறது. இதுகூட உனக்குத் தெரியவில்லையே என்று எடுப்பாகக் கூறி நின்றது.

இத்தனையும் கேட்ட அவனது உள்ளத்தில் புத்துணர்வு உதயமானது. கைகளிலிருந்து கத்தி நழுவிக் கீழே விழுந்தது. மரங்களின் மகத்துவத்தை நினைத்து மனம் நிறைய வாழ்த்தினான். ஆனால், அடுத்த கணமே பசி வயிற்றைக் கிள்ள, தன் குடும்ப நிலை மனத்திரையில் ஓடியது. குழந்தைகளின் ஓலம் காதிற் பட்டுத் தெறிப்பதுபோன்ற உணர்வு, மீண்டும் குனிந்து கீழே கிடந்த கத்தியை எடுத்து மளமளவென மரத்தை வெட்டித் தள்ளுகிறான். என்ன செய்வது இது மரத்தின் விதியா? இல்லை அவன் செய்யும் சதியா? விடை கூறுங்களேன். ✱

## உங்கள் கவனத்திற்கு:

"சூழல் சுடர்" ஒரு மாதாந்த வெளியீடு. இதனைத் தொடர்ந்து பெற விரும்புவோர் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

சந்தா விபரம்:

12 மாதம் - ரூ. 60/-
06 மாதம் - ரூ. 30/-
03 மாதம் - ரூ. 15/-
தனிப்பிரதி - ரூ. 5/-

காசோலை, மணியோடர், போஸ்ரல ஓடர் யோ. இ. கிறிஸ்ரோபர் பெயரில் எடுக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவுச்சுடர்... [5ம் பக்கத் தொடர்ச்சி]

ஊ. பரிசுகள்:

1. பிரதேசச் செயலக மட்டம்: 3 பரிசுகள்

| | கட்டுரை | கவிதை |
|---|---|---|
| 1ம் பரிசு | 200/- | 100/- |
| 2ம் பரிசு | 100/- | 75/- |
| 3ம் பரிசு | 50/- | 50/- |

2. மாவட்ட மட்டம்: 5 பரிசுகள்

| | கட்டுரை | கவிதை |
|---|---|---|
| 1ம் பரிசு | 500/- | 250/- |
| 2ம் பரிசு | 400/- | 200/- |
| 3ம் பரிசு | 300/- | 150/- |
| 4ம் பரிசு | 100/- | 100/- |
| 5ம் பரிசு | 100/- | 100/- |

எ. போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

ஏ. பரிசு பெற்ற ஆக்கங்கள் அனைத்தும் சூழல் சுடர் சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

ஐ. பரிசளிப்பு வைபவம்:

ஏப்ரல் 22ஆம் திகதி நடாத்தப்படும் பொது வைபவத்தில் பரிசுகள் வழங்கப்படும்.

ஒ. நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

ஓ. ஆக்கங்கள் உறுதிப்படுத்தப்படவேண்டிய மாதிரி:

பாடசாலை பெயர்:

மாணவர் பெயர்:

ஆண்டு:

அதிபரின் உறுதியுரை: இது இம்மாணவரின் சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

அலுவலக இலாஞ்சனை: ஒப்பம்:

பிரிவுக் கல்வியதிகாரியின் ஒப்பம்:

இலாஞ்சனை:

திகதி:

## தாவரங்களின் பயன்கள்...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

### காட்டாமணக்கு விதை

★ தோடு நீக்கிய பருப்பைச் சிறிது வறுத்து உண்டால் சிறந்த நீர், மலம் போக்கியாகச் செயற்படும்.

★ சில நஞ்சுகளுக்கு முறிவு மருந்தாகவும் பயன்படுகின்றது.

★ இவ்விதை குழந்தைகளுக்கு உகந்ததல்ல;

### எண்ணெய்

★ நீர், மலம் போக்கி மற்றும் உடற்தேற்றி ஆகிய பண்புகள் எண்ணெய்க்கு உண்டு.

★ இதை இதர தைலங்களுடன் கலந்து வலி நோய்களுக்கும், தோல் சம்பந்தமான நோய்களுக்கும் பூசுவதுண்டு.

★ தேக நீர் வீக்கம், பக்கவாதம், புழுத் தொல்லை ஆகியவற்றிற்கு மிகச் சிறிய அளவில் கொடுக்கலாம்.

★ பால் கொடுக்கும் தாய்க்கு முலை மேல் எண்ணெய் தடவினால் பால் சுரப்பது அதிகரிக்கும்.

### வேர்

இதன் வேர் பட்டையுடன், பெருங்காயமும் மோருஞ் சேர்த்து செரியாமை, பெருங்கழிச்சல் ஆகியவற்றிற்குக் கொடுக்கலாம். ✸

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுடர்

★ மாவடிவேம்பு திரு. ஜேசுதாஸ் என்பவருக்கு சித்தாண்டி திரு. ஜெயரஞ்சிதனிடம் இருந்து 243 மரக் கன்றுகள் எடுத்து வழங்கப்பட்டன.

★ 1994ல் புதிய பாடசாலைகளில் சூழலணியை உருவாக்குவதிலும், பழைய சூழலணியை மீண்டும் புதுப்பிப்பதிலும் ஊக்கப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் வெளிக்கள உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

★ கல்லடி, புதுமுகத்துவாரத்தில் உள்ள ஒருசில வீடுகளிற்கும், நாவலடி கிராமத்தில் உள்ள ஒரு வீட்டிற்கும் கத்தா, மரமுந்திரிகை, பலா போன்ற மரக்கன்றுகள் 3-2-94 அன்று வழங்கப்பட்டன.

★ கிரிமடு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்திற்கு திருமதி தயாபரன், மருதை, கத்தா, வேம்பு, பலா, புங்கை, வம்மி, அரசு, அத்தி போன்ற மரக்கன்றுகளையும், வன இலாகாவிடம் இருந்து அக்கேசியா, திருவாட்சி, திருக்கொன்றை, மயிர்க்கொன்றை போன்றவற்றையும் பெற்றுக்கொடுத்துள்ளார். இவை கடந்த 4-2-94 அன்று ஆலய வளாகத்தில் நாட்டப்பட்டன.

★ மட்டக்களப்பு விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து எம்மால் ஒழுங்கு செய்யப்பட்ட விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு விவசாயப் பணிமனைக் கேட்போர் கூடத்தில் 01-02-94 அன்று நடைபெற்றது. தலைப்பு: ''மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உவப்பான பழமரச் செய்கையும், அவற்றை உற்பத்தி செய்தலும்''. எமது நாற்றுமேடைத் திட்டத்தில் பங்குகொள்ளும் தனியாரும், பாடசாலை மாணவர்களும் கலந்துகொண்டனர். ❋

**"மன்று",**
**16, புனித மிக்கேல் வீதி,**
**மட்டக்களப்பு.**

To :- The Principal
Bt/ Kaluwankerny Vevekan
Vidyalayam
Mirakkottanchenai

இப்பிரசுரம் மன்று இணைப்பாளர் யோ. இ. கிறிஸ்ரோபரினால் மட்டக்களப்பு செண். ஜோசப் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Com. by S. Singarajah.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org